

## வாழ்த்துரை

பேராசிரியர் டாக்டர் சுப திண்ணப்பன்
சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம், சிம் பல்கலைக் கழகம், சிஙகப்பூர்

இலக்கியங்கள் உறவுப் பாலங்களாகத் திகழ்ந்து வந்திருப்பதற்கு நம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பலப்பல சான்றுகளைக் காணலாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தோன்றிய சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய புறநானூற்றில் கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என உலக உறவுக்கு அறைகூவல் விடுத்துள்ளார். சங்க அக இலக்கியங்கள் ஆண் பெண் உள்ளக் காதல் உறவை ‘செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சங்கள் கலந்த உறவை ‘நிலத்திலும் பெரிது வானினும் உயர்ந்தது நீரினும் ஆரளவின்றே’ என அளக்க முயன்றன. திருவள்ளுவர் தம் குறளில்
‘யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு’ என நாட்டுறவுக்கும் ஊர் உறவுக்கும் உறுதுணை கல்வியே என்கிறார். இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரக் காப்பியத்தின்வழி சேர நாடு சோழ நாடு பாண்டிய நாடு எனப் பிரிந்து கிடந்த பெருநிலத்தைத் தமிழ்நாடாக ஒற்றுமைப்படுத்தக் கண்ணகிக் கதையைப் பயன்படுத்தி வெற்றிகண்டுள்ளார். இந்த ஒருங்கிணைப்பைப் பேராசிரியர் மு வரதராசனார் அவர்கள் ‘கண்ணகி என்ற ஞாயிறு சோழ நாட்டில் உதித்தது. பாண்டிய நாட்டில் கனன்றது. சேர நாட்டில் மறைந்தது’ என்று கூறிப் பாராட்டுகிறார். மணிமேகலையும் அமுதசுரபி வழியாகப் பசிப்பிணி களைந்து பாடுவதை இணைக்கிறது. சீவகசிந்தாமணியும் சீவகனை மையப்படுத்தித் தென்னாடு, வடநாடு ஆகியவற்றை இணைக்கிறது. இடைக்காலப் பக்தி இலக்கியங்கள் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உறவுப் பாலங்களாக உள்ளன.

கவிச்சக்கரவர்த்தி கம்பனோ வேடர்குலக் குகன்,குரக்கின வேந்தன் சுக்ரீவன், அரக்கர் குலத்தோன்றல் வீடணன் ஆகியோரை இராமன் உடன்பிறப்புக்களாக உறவு கொள்வதைப் பின்வரும் பாடல்வழி பேசுகிறார்.

**குகனொடும் ஐவரானோம் முன்பு, பின் குன்றுசூழ்வான்**
**மகனொடும் அறுவரானோம், எம்முழை அன்பின்வந்த**
**அகனமர் காதல் ஐய, நின்னொடும் எழுவர் ஆனேம்**
**புகல் அருங்கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை**

வீடணன் அடைக்கலப் படலம் 143

இங்கே ‘புதல்வரால் பொலிந்தான் நுந்தை’ என்னும் தொடர் உறவின் சிகரத்தை உணர்த்துகிறது. சேக்கிழாரும் பெரிய புராணத்தில் அடியார்களிடையே ஏற்றத் தாழ்வின்றி உறவு கொள்ளும் இயல்பை உணர்த்துகிறார். எவ்வுயிரும் தன்னுயிர்போல எண்ணி இரங்கும் இயல்பைத் தருமாறு தாயுமானவரும் வேண்டுகிறார். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியதாகப் பாடும் வள்ளலாரிடம் மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிராகக் கருதும் மாண்பினைக் காண முடிகிறது.இவ்வாறே பாரதியாரும் ‘தாயின் மணிக்கொடி பாரீர், அதைத் தாழ்ந்து பணிந்திட வாரீர்’ என்று நாட்டுப்பற்றினை ஊட்டும் உறவினை வலியுறுத்துகிறார். பாரதிதாசன் ’தமிழுக்கும் அமுதென்று பேர் அது எங்கள் உயிருக்குநேர்’ என்று மொழிக்கும் நமக்குமுள்ள உறவினை நவில்கிறார்.

இவ்வாறு உறவுப் பாலங்களாக வளர்ந்து வந்துள்ள தமிழிலக்கியம் மலேசிய சிங்கப்பூர் நாடுகளிடையே எவ்வாறு உறவினை வளர்த்து வந்துள்ளது என்பதை ஆராயும் நல்ல நோக்கத்துடன் சிங்கப்பூரில் தமிழ்மொழி விழாவுடன் இணைந்து ஏப்ரல் 6 ஆம் நாளன்று நடத்தும் இரண்டாம் மலேசிய சிங்கப்பூர் இலக்கிய உறவுப் பாலம் மாநாடு சிறப்புற நிகழ வாழ்த்துகிறேன்.